## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 215/மா/2023**
**நாள் : 30.08.2023**

திரு. ஜோபின்ஸ்டன் ஷெர்வின்,
சென்னை–600 116. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–11,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலப்பாக்கம், மெட்ரோ நகர் விரிவாக்கம், 7வது தெரு, பிளாட் எண்.6 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜோபின்ஸ்டன் ஷெர்வின் என்பவரின் 14.07.2023 நாளிட்ட மனு 17.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 215/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலப்பாக்கம், மெட்ரோ நகர் விரிவாக்கம், 7வது தெரு, பிளாட் எண்.6 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜோபின்ஸ்டன் ஷெர்வின் என்பவரின் முறையீட்டு மனுவில் :

> கடந்த 2009 முதல் குடியிருந்து வருகிறேன். எனது வீட்டிற்கு பின்பக்கத்தில் உள்ள மனையில் திரு. இளங்கோ என்பவர் கட்டடம் கட்டி வருகிறார். மேற்கண்ட கட்டடத்திற்கு வலது மற்றும் இடது புறமும் மேலும் முன்பக்கம் மற்றும் பின் பக்கங்களில் விதிகளின்படி போதுமான இடம் (Set back) விடாமல் வீடு கட்டி வருகிறார். மேலும் அங்குள்ள பொது இடத்தையும், சாலையையும் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், அக்கட்டடத்தின் முதல் மாடியில் கட்டப்பட்டுள்ள ஒரு பகுதி மற்றும் பால்கனி ஆகியவை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட கட்டடத்திற்கு மாநகராட்சியிடமிருந்து கட்டட அனுமதி பெறப்படவில்லை. எனவே இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு புகார் மனுக்கள் அனுப்பியும் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 16.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 03.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 16.8.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

மேற்கண்ட முகவரியில் மனுதாரரான நான் கடந்த 2009 முதல் குடியிருந்து வருகிறேன். எனது வீட்டிற்கு பின்பக்கத்தில் உள்ள மனையில் திரு. இளங்கோ என்பவர் கட்டடம் கட்டி வருகிறார். மேற்கண்ட கட்டடத்திற்கு வலது மற்றும் இடது புறமும் மேலும் முன்பக்கம் மற்றும் பின் பக்கங்களில் விதிகளின்படி போதுமான இடம் (Set back) விடாமல் வீடு கட்டி வருகிறார். மேலும் அங்குள்ள பொது இடத்தையும், சாலையையும் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், அக்கட்டடத்தின் முதல் மாடியில் கட்டப்பட்டுள்ள ஒரு பகுதி மற்றும் பால்கனி ஆகியவை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட கட்டடத்திற்கு மாநகராட்சியிடமிருந்து கட்டட அனுமதி பெறப்படவில்லை. எனவே இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு புகார் மனுக்கள் அனுப்பியும் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்கள் மற்றும் புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

**3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11–ன் உதவி செயற் பொறியாளர் 16.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்ட ஆலப்பாக்கம் மெட்ரோ நகர் இரண்டாவது தெருவில் திரு. இளங்கோ என்பவரால் கட்டப்பட்டு வரும் கட்டடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டடத்திற்கான வரைபட அனுமதி கட்டட உரிமையாளரால் பெறப்படவில்லை. எனவே, . மேற்கண்ட கட்டட உரிமையாளருக்கு Stop work Notice – Notice calling for approved plan தாக்கீது 9.8.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் 2023 ஏப்ரல் மாதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 11ல் புகார் அளித்தவுடன் மண்டல அலுவலகத்தில் உள்ள இணையதளப் பிரச்சனை (server problem) காரணமான மனுதாரரின் புகார் மனுவின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் – 11ன் உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.

மனுதாரர் திரு. ஜோயின்ஸ்டன் ஷெர்வின் தனது வீட்டிற்கு பின்பக்கத்தில் உள்ள மனையில் திரு. இளங்கோ என்பவர் எவ்வித இடைவெளியும் விடாமல் விதி மீறி, கட்டடம் கட்டப்பட்டுள்ளதாகவும், அக்கட்டடத்தின் பால்கனி பகுதி ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதாகவும், அக்கட்டடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளதாகவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 11, அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறி, தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

5. மனுதாரர் குறிப்பிட்டுள்ள விதிமீறல் கட்டடத்தை ஆய்வு செய்யப்பட்டதில், அக்கட்டட உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் வரைபட அனுமதி பெறவில்லை எனவும், அதனால் அக்கட்டட உரிமையாளருக்கு 9.8.2023 அன்று Stop Work Notice – Notice calling for approved plan தாக்கீது வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் புகார் அளித்த பின்பு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -11ன் இணையதளம் பயன்பாட்டில் பழுது ஏற்பட்டதால் உடன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-11ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் ஏப்ரல் 2023 அன்று குறிப்பிட்ட விதிமீறல் கட்டடம் குறித்து புகார் மனு அளித்தும் இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்திரவிட்டபின்னர் மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -11ன் அலுவலர்கள் 9.8.2023 அன்று Stop Work Notice / Notice Calling for Approved Plan தாக்கீது வழங்கியுள்ள செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -11ன் கள ஆய்வாளர்கள் தங்கள் மண்டலத்தில் கட்டப்படும் கட்டடங்களை முறையாக ஆய்வு செய்வதில்லை என்பது தெரிகிறது. இதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-11ன் அலுவலர்களின் மெத்தனபோக்கு மற்றும் பணியில் சிரத்தை இல்லாமல் இருப்பதே காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

7. 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு குறிப்பாக

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner. namely:-

(a) x x x x
(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x
(e) x x x x

அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

8. மனுதாரர் ஏப்ரல் 2023 அன்று புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சிய போக்குடன் செயல்பட்டு, இம்முறைமன்றம் மனுதாரரின் மனு மீது விசாரணைக்கு உத்திரவிட்ட பின்னர் 9.8.2023 அன்று தாக்கீது வழங்கிய பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 11ன் உதவி ஆணையர் (ம) முன்னாள் மற்றும் இன்னாள் அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், மண்டலம்-11ன் எல்லைக்குள் கட்டப்படும் கட்டடங்களை கள ஆய்வாளர்கள் ஆய்வு செய்து இரு மாதத்திற்கு ஒரு முறை மண்டலம் -11ன் அலுவலகத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -11ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. இந்நேர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து 45 தினங்களுக்குள் அறிக்கை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -11 அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

Simply putting the blame on the server for not taking action on the complaint of the petitioner exposes the complicity, collusion and indifference of the field officials concerned. The zonal 'officials' attempt to take this Forum for a ride by such false misleading and bluffy deposition is condemned severely. This kind of insincere and inefficient officials brings bad repute to the image of the corporation by such wanton omission, inaction and blatant apathy. But for this complaint, the zonal officials would not take move an inch in the issue on their own. The Greater Chennai Corporation Commissioner is directed to launch disciplinary action against the delinquent officials involved in this suppression drama. A detailed circular containing strict instructions already issued on the subject of building violations and deviations contrary to the Town and Country Planning Act, 1971 may be sent to all Zones reiterating pro – active action curbing Building Rules' violations. Unless the Greater Chennai Corporation

initiates strong disciplinary action against the delinquent field level officials the menace of Building violations cannot be controlled effectively.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ஜோபின்ஸ்டன் ஷெர்வின்,
   பிளாட் எண்.6, 7வது தெரு, மெட்ரோ நகர் விரிவாக்கம்,
   ஆலப்பாக்கம்,
   சென்னை–600 116.
2. மண்டல அலுவலர்,
   மண்டலம்–11, பெருநகர சென்னை மாநகராட்சி,
   33, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம், சென்னை – 600 087.
3. கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. அரசு முதன்மை தலைமை செயலாளர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை – 600 009.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்